அரைநூற்றாண்டாக தன்னுடைய அன்பால் மணவாழ்வை மனநிறைவான வாழ்க்கையாக அளித்துள்ளார் துர்கா!

# எதிர்பார்ப்புகளற்ற அன்பும் விட்டுக் கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது 50வது திருமண நாளையொட்டி சமூக வலைதளப் பதிவு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது 50வது திருமண நாளையொட்டி நேற்று (20.8.2025) கோபாலபுரம் இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (20.8.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மனைவி திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களுடன் தனது 50வது திருமண நாளையொட்டி தாயார் திருமதி தயாளு அம்மாள் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

சென்னை, ஆக.21-

“அரைநூற்றாண்டாக என் வாழ்வின் உறுதுணையாக என்னில் பாதியாக துர்கா அவர்கள் நுழைந்து, தன்னுடைய அன்பால் மண வாழ்வை மன நிறைவான வாழ்க்கையாக அளித்துள்ளார் என்றும், எதிர்பார்ப்புகளற்ற அன்பும் விட்டுக் கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும் என இளைய தலைமுறையினருக்கும் சொல்லிக் கொள்கிறோம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது 50வது திருமண நாளையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**அரைநூற்றாண்டாக என் வாழ்வின் துணையாக என்னில் பாதியாக துர்கா அவர்கள் நுழைந்து, தன்னுடைய அன்பால் மணவாழ்வை மனநிறைவான வாழ்க்கையாக அளித்துள்ளார்!**

**அவர் மீதான அளவற்ற அன்பே என் நன்றி!**

**எதிர்பார்ப்புகளற்ற அன்பும் விட்டுக்கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும் என இளைய தலைமுறையினருக்குச் சொல்லிக் கொள்கிறோம்.**

**வீடும் நாடும் போற்றும் வாழ்வை அனைவரும் வாழ்ந்திட விழைகிறோம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சங்கரன் கோவில் நகர்மன்றத் தலைவர்

# தேர்தலில் வெ.கௌசல்யா வெற்றி!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா வாழ்த்து!

தென்காசி.ஆக.21-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் பதவியை மீண்டும் தி.மு.க கைப்பற்றியது. சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவராக கழக 12 வது வார்டு உறுப்பினர் வெ. கௌசல்யா நடைபெற்ற மறைமுக தேர்தலில் 22 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க வேட்பாளர் 6 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றி பெற்ற நகர்மன்றத் தலைவர் வெ.கௌசல்யா தென்காசி மாவட்ட வடக்குச் செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ.விடம் வாழ்த்துப் பெற்றார்.

சங்கரன்கோவில் நகராட்சியில் மொத்தம் 30 நகராட்சி உறுப்பினர்கள் உள்ளனர்.இதில் தி.மு.கவைச் சேர்ந்த உமாமகேஸ்வரி நகர்மன்றத் தலைவராக இருந்தார். அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. பின்னர் மதுரை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி ஜூலை 17ஆம் தேதி நடைபெற்ற நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து நடைபெற்ற வாக்கெடுப்பில் தீர்மானத்திற்கு ஆதரவாக 28 நகர் மன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.இதனால் உமா மகேஸ்வரி நகர் மன்றத் தலைவர் பதவியை இழந்தார்.

பின்னர் சங்கரன்கோவில் நகர்மன்ற அலுவலகத்தில் நகர்மன்றத் தலைவர் பதவிக்கான மறைமுகத் தேர்தல் 18.08.2025 அன்று நடைபெற்றது. தேர்தலை சங்கரன்கோவிலில் நகராட்சி ஆணையர் ஷாம் கிங்ஸ்டன் நடத்தினார். தேர்தல் பணியில் பொறியாளர் இர்வின்ஜெயராஜ்,

மேலாளர் ராஜேந்திரன்,சுகாதார அலுவலர் வெங்கட்ராமன்,நகர்மன்ற எழுத்தர் சுடலை ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் தலைவர் பதவிக்கு கழக 6 வது வார்டு உறுப்பினர் வெ. கௌசல்யா,26 வது வார்டு அ.தி.மு.க உறுப்பினர் அண்ணாமலை புஷ்பம் ஆகியோர் மனு தாக்கல் செய்து போட்டியிட்டனர்.மொத்தமுள்ள 30 உறுப்பினர்களில் 28 உறுப்பினர்கள் வந்திருந்தனர்.2 உறுப்பினர்கள் வரவில்லை. (அதாவது முன்னாள் நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி 17 வது வார்டு சுயேச்சை உறுப்பினர் விஜயகுமார்) நடைபெற்ற இந்த தேர்தல் முடிவில் தி.மு.க வேட்பாளர் வெ.கௌசல்யா 22 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க வேட்பாளர் அண்ணாமலைபுஷ்பம் 6 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார்.இந்தத் தேர்தலில் அ.தி.மு.க உறுப்பினர்கள் 7 பேர் அக்கட்சிக்கு வாக்களிக்காமல் தி.மு.க.வுக்கு வாக்களித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றி பெற்ற வெ. கௌசல்யா தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. விடம் வாழ்த்துப் பெற்றார்.

# ‘பிரதமர் இண்டன்ஷிப்’ திட்டத்தின் சுணக்கத்திற்கு காரணம் என்ன?

## நாடாளுமன்றத்தில் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**புதுடெல்லி, ஆக. 21 -**

**பிரதமர் இன்டன்ஷிப் திட்டத்தின் சுணக்கத்துக்கு காரணம் என்ன? என கனிமொழி கருணாநிதி எம்.பி. மக்களவையில் கேள்வி எழுப்பினார்.**

**PM Internship எனப்படுகிற பிரதமர் இன்டன்ஷிப் திட்டம் செயல்படுத்தப்படும் முறை, அதில் நிலவும் தேக்கங்கள் குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்விகளை எழுப்பினார்.**



*“PM Internship எனப்படுகிற பிரதமர் இன்டன்ஷிப் திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து அத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை எத்தனை?*

*இத்திட்டத்தை செயல்படுத்துதலில் தனியார் நிறுவன ங்களுடன் போதுமான ஒருங்கிணைப்பு இல்லாததால், PM Internship இல் குறைந்த அளவிலான இளைஞர்களே பங்கேற்கிறார்கள் என்பதை ஒன்றிய அரசு அறிந்துள்ளதா?*

*அப்படியானால் இத்திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன?*

*இத்திட்டத்தின் கீழ் மிகக் குறைந்த ஆட்சேர்ப்புக்கான காரணங்களைக் கண்டறிய அரசாங்கம் ஏதேனும் மதிப்பாய்வு அல்லது மதிப்பீட்டை நடத்தியதா?*

*அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?*

*PM Internship திட்டத்தை மிகவும் பயனுள்ள வகையில் மறுசீரமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?”*

*ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்பி.எழுத்துபூர்வமாக கேட்டிருந்தார்.*

*இக்கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் கார்ப்பரேட் விவகாரத் துறை இணையமைச்சர் ஹர்ஷ் மல்கோத்ரா அளித்த பதிலில்,*

*“பிரதம மந்திரி இன்டன்ஷிப் திட்டம் (PMIS) 202425 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளில் சிறந்த 500 நிறுவனங்களில் ஒரு கோடி இளைஞர்களுக்கு இன்டன்ஷிப் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.*

*கார்ப்பரேட் விவகார அமைச்சகம் அக்டோபர் 3, 2024 அன்று இந்தத் திட்டத்தின் ஒரு முன்னோடித் திட்டத்தை ( பைலட் ப்ராஜக்ட்) தொடங்கியது.*

*இதன்படி ஒரு வருடத்தில் 1.25 லட்சம் இளைஞர்களுக்கு இன்டன்ஷிப் வாய்ப்புகளை வழங்குவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*இந்த பைலட் திட்டத்தின் முதல் சுற்றில்,280 தனியார் நிறுவனங்கள் கூட்டு நிறுவனங்களாக இணைந்தன. இவை 1.27 லட்சத்திற்கும் மேற்பட்ட இன்டன்ஷிப் வாய்ப்புகளை முன்வைத்தன.*

*நாடு முழுவதிலிருந்தும் PMIS போர்ட்டலில் 1.81 லட்சம் வேட்பாளர்களிடமிருந்து 6.21 லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன.*

*இவற்றில் 82,000 க்கும் மேற்பட்ட இன்டன்ஷிப் ஆஃபர்கள் வழங்கப்பட்ட நிலையில், 28,000 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஏற்று இன்டன்ஷிப்பில் இணைய முன் வந்தனர்.*

*முதல் சுற்றில் 8700 க்கும் மேற்பட்ட விண்ணப்ப தாரர்களே இன்டன்ஷிப்பில் சேர்ந்தனர்.*

*பிஎம் இன்டன்ஷிப் இரண்டாவது சுற்று பைலட் திட்டம் 2025 ஜனவரி 9 ஆம் தேதி தொடங்கியது.*

*இந்த சுற்றில் 327 கூட்டு நிறுவனங்கள் நாடு முழுவதிலும் 735 மாவட்டங்களில் 1.18 லட்சத்துக்கும் மேற்பட்ட இன்டன்ஷிப் வாய்ப்புகளை அளித்துள்ளன. 2 லட்சத்து 14 ஆயிரம் விண்ணப்பதாரர்களிடம் இருந்து 4 லட்சத்து 55 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன.*

*2025 ஆகஸ்டு 12 ஆம் தேதிய நிலவரப்படி இத்திட்டத்தின் கூட்டு நிறுவனங்கள் 82 ஆயிரம் இன்டன்ஷிப் பயிற்சிகளை அளிக்க முன் வந்தன. இவற்றில் 24 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் இன்டன்ஷிப்பில் இணைந்துள்ளனர்.*

*நிறுவனங்கள் பயிற்சிக்கான விருப்பங்களை வெளியிடுதல், அவற்றை பயிற்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளுதல், சேர்தல் செயல்முறை இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது.*

*PM Internship திட்டத்தை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கும் தொழில்துறை, மாநில அரசுகள், தொழில் சங்கங்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களுடன் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் தொடர்பு கொண்டு, அவர்களை ஒருங்கிணைத்து பணிபுரிந்து வருகிறது.*

*இத்திட்டம் பற்றிய விவரங்கள் நாடு முழுவதும் உள்ள இளைஞர்களை சென்று சேரும் வகையில் தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.*

*PMIS முன்னோடித் திட்டத்தின் முதன்மை நோக்கம் இளைஞர்களுக்கு வணிகம் உள்ளிட்ட நிறுவனங்களின் சூழலில் பயிற்சி மற்றும் அனுபவத்தை வழங்குவதன் மூலம் அவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதாகும்.*

*கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் இத்திட்டம் பற்றிய மதிப்பீடு ஆய்வு, கால் சென்டர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. விண்ணப்பதாரர்கள், தொழில் நிறுவனங்கள், தொழில் அமைப்புகள், மாநில அரசுகள் உள்ளிட்டவர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*இன்டன்ஷிப் அழைப்பை ஏற்காத விண்ணப்பதாரர்களிடம் அதற்கான காரணங்களும் இந்த மதிப்பீட்டாய்வில் கேட்கப்பட்டன.*

*அதில் கணிசமானோர் இன்டன்ஷிப் வழங்கப்படும் இடம், பயிற்சிக் காலம் ஆகியவை தங்களுக்கு வசதியாக இல்லாத காரணத்தாலும், உயர் கல்வியைத் தொடர வேண்டியிருப்பதால் பங்கேற்க இயலவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள்.*

*பிஎம் இன்டன்ஷிப் பைலட் திட்டம் என்பது முழு அளவிலான செயல்படுத்தலுக்கு முந்தைய நிலையாகும். திட்டத்தை செயல்படுத்தும் உத்திகள், செயல்படுத்துவதற்கான உள்கட்டமைப்புகள் பற்றிய சோதனையாக இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*பைலட் திட்டத்தை செயல்படுத்தும் போது இதில் தொடர்புடைய அனைத்து தரப்பினரிடம் இருந்தும் பெறப்பட்டுள்ள கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் முடிவுகளை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் அடிப்படையில் பிஎம் இன்டன்ஷிப் திட்டத்தின் முழு அளவிலான செயல்பாடு அமையும்” என்று ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.*


சிப்பாய்ப் புரட்சிக்கு நூற்றாண்டுக்கு முன்பே அந்நிய ஆதிக்கத்திற்குச் சவால் விட்ட

# ஒண்டி வீரனின் வீரவரலாற்றை இந்தியா முழுவதும் பரவச் செய்திட இந்நாளில் உறுதியேற்போம்!

## மாவீரர் ஒண்டி வீரனின் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 21 -

மாவீரர் ஒண்டிவீரனின் நினைவு நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:



**ஆங்கிலேயருக்கு நெல்லைக் கப்பமாகக் கட்டமறுத்து, நெற்கட்டும் செவலை நெற்கட்டான்செவலாக மாற்றி, அந்நிய ஆதிக்கத்திற்குச் சவால் விட்ட தென்மலைப் போரின் மாவீரர் ஒண்டி வீரனின் நினைவுநாளில் அவருக்கு என் வீரவணக்கம்!**

**சிப்பாய்ப் புரட்சிக்கு நூறாண்டுகளுக்கு முன்பே விடுதலை உணர்வோடு தென் தமிழ்நாட்டின் தீரர்களான பூலித்தேவனும் படைத்தளபதி ஒண்டிவீரனும் போர் செய்தனர் எனும் வீர வரலாற்றை இந்தியா முழுவதும் பரவச் செய்திட இந்நாளில் உறுதியேற்போம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# நெல்லை கிழக்கில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்!

நெல்லை, ஆக.21-

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை கிழக்கு மாவட்டம் கோபாலசமுத்திரம் முதல்நிலை பேரூராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று வருகை தந்த பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து, கோரிக்கை மனுக்களுக்கு உடனடி தீர்வும் பெற்றுக் கொடுத்து,பொதுமக்களுக்கு பேரூர் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட குளிர்பானங்கள் மற்றும் தேநீர் வழங்கினார். உடன் கோபால சமுத்திரம் முதல்நிலை பேரூராட்சி மன்ற தலைவரும் மாவட்ட துணை செயலாளருமான தமயந்தி,மாநில தொண்டரணி துணைச்செய லாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், சேரை கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துப் பாண்டி என்ற பிரபு,நகர செயலாளர் வானுமாமலை, துணைத்தலைவர் சுந்தர் ராஜன், மாவட்ட பொறியாளரணி துணை அமைப்பாளர் மாயா சுரேஷ், மாவட்ட பிரதிநிதி ஜெபக்குமார்,வார்டு கவுன்சிலர்கள் பிரபாரதி, கிருஷ்ணவேணி, கொடி லெட்சுமி, மாவட்ட தொண்டரணி தலைவர் ஜெயமாலதி,கவுன்சிலர் ராமு உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி 58வது வார்டு மேலப்பொன்னகரத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய நியாய விலைக் கட்டிடத்தை தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சதீஷ்குமார், மாமன்ற உறுப்பினர் மா.ஜெயராம், ஆரப்பாளையம் பகுதி செயலாளர் எஸ் எஸ் மாறன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், அதிகாரிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.